அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 07/2022

எனது இல : EST-6/03/LEA/1060
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2022.04.07

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்/அரசாங்க அதிபர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>அரசாங்க அலுவலகங்களுக்கு 02 நாள் விசேட விடுமுறை பிரகடனப்படுத்துதல்</u>**

ஏப்ரல் 08 ஆம் திகதி மற்றும் எதிர்வரும் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் பின்னர் அலுவலகங்கள் திறக்கப்படும் ஏப்ரல் 18 ஆம் திகதி வரையான காலத்தில் ஏப்ரல் 11 மற்றும் 12 ஆம் திகதிகள் மாத்திரம் அரசாங்க அலுவலகங்கள் திறக்கப்பட வேண்டியுள்ளன.

02. மேலே குறிப்பிட்டவாறு ஏப்ரல் 11 மற்றும் 12 ஆகிய இரண்டு நாட்களிலும் அலுவலகங்கள் திறக்கப்பட்டாலும் அந்த நாட்களில் உத்தியோகத்தர்களினதும் சேவைபெறுநர்களினதும் வருகை குறைவாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியும் என்பதனால் அந்த இரண்டு நாட்களிலும் அலுவலகங்களைத் திறப்பதற்கு ஏற்படும் செலவுடன் ஒப்பிடுகையில் அதன் மூலம் கிடைக்கும் பயன்கள் குறைவாக இருக்க முடியும். அந்த நிலைமையைக் கவனத்தில் எடுத்து ஏப்ரல் 11 மற்றும் 12 இரண்டு நாட்களை அரசாங்க அலுவலகங்களுக்கு விசேட விடுமுறை நாட்களாக இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

03. அரசாங்கத்தின் அத்தியவசியச் சேவைகளைக் கொண்டு நடாத்துவதற்கு இது தடையாக அமையக் கூடாது.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு